# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.193/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 02 (PW– 02) |
| பெயர் | :- | மோகன்குமார் |
| தேதி | :- | 16–09–2025 |

**சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

என்னை சாட்சியம் சொல்ல நீதிமன்றத்திற்கு அழகேசன் அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவர் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்து சம்மந்தமாக வழக்கு தொடுத்துள்ளார். வழக்கு சொத்தின் புல எண்ணும் பட்டா எண்ணும் எனக்கு தெரியாது. யார் பெயரில் சொத்துக்கான பத்திரம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

நான் முத்தநாயக்கன்பட்டி பூசாரி தெருவில் ஏற்கனவே வசித்தேன் என்று காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் வாடகைக்கு வசிப்பதற்கு ஒப்பந்தம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. நான் மாதம்தோறும் வாடகை செலுத்துகிறேன் என்று காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

நான் அழகேசன் வீட்டில் வாடகைக்கு வசிக்கவில்லை என்றும் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும் அதனால்தான் நான்

வாடகைக்கு உள்ளேன் என்று காட்ட எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அழகேசன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.